
## திராவிடத்தால் வாழ்கிறோம்

823

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

61

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# மாணவர்களுக்கு அண்ணாவின் அறிவுரை!

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநாடு 19.11.1955 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் கூடியது. கே.ஏ.மதியழகன் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டை, நாவலர் நெடுஞ்செழியன் திறந்து வைத்தார். மாநாட்டில் சிறப்புரையாற்ற பேரறிஞர் அண்ணாவும், தி.மு.கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராக இருந்த என்.வி.நடராசனும் அழைக்கப்பட்டனர்.

அதே கோகலே மண்டபத்தில் இம் மாநாட்டிற்கு ஓராண்டுக்கு முன்பு பேசிய அண்ணா, "ஒரு நெடுஞ்செழியன் வந்தார், ஒரு மதியழகன் வந்தார். மற்ற நெடுஞ்செழியன்கள் எங்கே? மதியழகன்கள் எங்கே?" என்று வினவியிருந்தார். அவரது எண்ணத்தை ஈடேறச் செய்யும் வகையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமிழ்நாடெங்கும் இருந்து மாநாட்டிற்குத் திரண்டிருந்தனர்.

அப்போது சென்னை மாவட்டத் துணைச் செயலாளராக இருந்த கோ.செங்குட்டுவனுடன் 'முரசொலி' மாறன் மாநாட்டிற்கு வருகை தந்தார். இதுவே அவரது அரசியல் நுழைவின் முதல் படி. மாநாட்டின் பொருளாளராக முரசொலி மாறன் இருந்தார்.

மாநாட்டிற்குத் தலைமையேற்ற மதியழகன் பேசுகையில், "இன்றைய தினம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் ஆயிரக்கணக்கான ஆற்றலர்களைப் பெற்றுள்ளது. கடந்த பல வருடங்களாக அதன் பொறுப்பினை நான்



ஓவியம் : சிகரன்

ஏற்றிருக்கிறேன். பொதுச்செயலாளராக நானே தொடர்ந்து பணியாற்றுவது உங்களுக்கும் சிறப்பல்ல, எனக்கும் சிறப்பல்ல. எனவே, இந்தப் பொறுப்புகளை முன்னின்று நடத்த நீங்கள் முன்வர வேண்டும்" என்று அறைகூவல் விடுத்தார். நிறைவுரையாற்றிய அண்ணா, "மதியழகன் பொறுப்பைத் துறந்துவிடுவதாகக் கூறினார். கூர்ந்து கவனித்தால், தெரிந்திருக்கும். அப்படிச் செய்யத் தூண்டியவன் நான்தான். அவரை இன்னமும் மாணவர் கழகத்தில் அனுமதிக்கத் தயாராக இல்லை. எந்த விதத்திலும் குறைந்திராத துறையில் பணியாற்ற அவரை உங்களிடமிருந்து எடுத்துச் செல்கிறேன்" என்றார்.

மேலும், மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா கூடாதா என்பது இன்றும் எழுப்பப்படும் ஓர் முக்கியக் கேள்வி. இதற்கு எக்காலத்திற்கும் பொருந்தும் ஓர் பதிலைத் தந்தார் அண்ணா. "நல்ல மாளிகை ஒன்று; அதற்கு நாற்புறமும் நல்ல ஜன்னல்கள். வெளியிலிருந்து அடிக்கும் காற்று வேகமாக இருந்தால், ஜன்னலை மூடுவார்கள். வெளியிலிருந்து காற்று இல்லை என்றால் ஜன்னலைத் திறப்பார்கள். ஒரு மாளிகையினுள் இருப்பவர்களைப் போன்றவர்கள்தாம் மாணவர்கள். வெளியே அடிக்கிற காற்று பெருங்காற்றாக இருந்தால், மாணவர்கள் ஜன்னலை மூடிவிடத்தான் வேண்டும்; மாளிகையில் காற்றில்லாமல் ஒரே புழுக்கமாக இருந்தால், ஜன்னலைத் திறந்துதான் ஆக வேண்டும். அதுபோலவேத்தான் அரசியலிலும்; அரசியல் நிலைமைகளை மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுவதுதானே தவிர, அரசியலை நடத்திச்செல்லும் பொறுப்பு அரசியல்வாதிகளுக்குத்தான், மாணவர்களுக்கல்ல. மாணவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள் என்றால், அந்த அளவிற்கு அரசியல் சூழ்நிலைகள் இருக்கின்றன என்று பொருள். அத்தகைய சூழ்நிலை உருவாகுதல்கூடாது என்பதுதான் தி.மு.கழகத்தின் நோக்கமாகும்" என்றார்.

மதியழகன் பதவி விலகியதை அடுத்து, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்திற்கு அமைப்புக்குழு உருவாக்கப்பட்டது. மதுரை, காஞ்சி, கோவை, சேலம், தஞ்சை, அண்ணாமலை நகர், பெங்களூர், புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். இதில் தஞ்சை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டவர் 'முரசொலி' மாறன். புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்ட நாகராசன், பின்னாளில் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆனார் என்பதும் வரலாறு!.

...கூட்டம் திரளும்

## மதவெறிப் பதற்றங்களை வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசு!

காஷ்மீரில் சுற்றுலா பயணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை, இந்து–முஸ்லிம் தாக்குதலாக கட்டமைக்க தொடக்கம் முதலே பா.ஜ.க. பிரமுகர்கள் முயன்றதை சமூக வலைதளங்கள் விமர்சனம் செய்தன . தொடர்ச்சியாக, உள்துறை அமைச்சகம், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானியர்களை வெளியேற்ற எடுத்த நடவடிக்கை எல்லாம் சேர்ந்து, வடமாநிலங்களில் புதிய பதற்றங்களை உருவாக்கியுள்ளன.

ஹரியானா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட் மாநிலங்களில் காஷ்மீர் மாணவர்களைத் தாக்குவது, சைக்கிளில் காய்கறி விற்கும் முஸ்லிம் வியாபாரிகளை ஊருக்குள் விடாமல் வழிமறித்துத் தாக்குவது என்று தினமும் புதிய புதிய சச்சரவுகளை சில கும்பல்கள் தொடங்கியுள்ளன.

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில், 'சத்திரிய பசு பாதுகாப்புப் படை'யைச் சேர்ந்தவர்கள் என்று கூறும் கும்பல் ஒன்று, காஷ்மீரில் 26 பேர் கொல்லப்பட்டதற்குப் பழிக்குப் பழியாக 2,600 முஸ்லிம்களைக் கொல்லப்போவதாக சபதம் எடுத்து வீடியோ வெளியிட்டுள்ளார்கள். அந்த வீடியோவை தங்களது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள உத்தரப் பிரதேச காங்கிரஸ், அந்தக் குற்றவாளிகள் ஆக்ராவைச் சேர்ந்த 26 வயதான குல்ஃபாம் என்கிற ஓட்டல் தொழிலாளியைச் சுட்டுக் கொன்றதுடன், அவரைக் காப்பாற்ற வந்த அவரது நண்பர் சைஃப் அலி என்பவரையும் சுட்டுக்கொல்ல முயன்றதில், அவர் மார்பில் குண்டு காயத்துடன் தப்பியுள்ளார் என்கிற தகவலையும் வெளியிட்டுள்ளது.

கொடூர ஆயுதங்களோடு வீடியோ வெளியிட்டுள்ள இந்தக் குற்றவாளிகளைக் கைது செய்யாத ஆக்ரா போலீசார், இப்படியொரு அமைப்பே ஆக்ராவில் இல்லையென்று சொல்கிறது என்றும் குற்றம்சாட்டி இருக்கிறது காங்கிரஸ் கட்சி. இந்தியாவில் மருத்துவ சிகிச்சையில் இருக்கும் பாகிஸ்தானியரையும் வெளியேற்றும் ஒன்றிய அரசு, உள்நாட்டில் மத ஒற்றுமையைச் சீர்குலைக்கும் கும்பலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் ஏற்றிய இருவண்ணக் கொடி!


வி.ஏ.மாரி வண்ணமுத்து

நான் கடந்த 1996–ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 29 ஆண்டுகள் நெல்லை மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியச் செயலாளராக இருந்து வருகிறேன். 1997–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டம், புதுப்பட்டிக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்தார். அவரை வரவேற்று, அவருடைய தலைமையில் கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றிவைத்த நிகழ்ச்சியில் அவருடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

– **வி.ஏ.மாரிவண்ணமுத்து,**
**ஒன்றியக் கழகச் செயலாளர்,**
**பாப்பாக்குடி, நெல்லை மாவட்டம்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பகம்

கௌதம் ராஜ்

61


**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# காலத்தைக் காட்டும் கழகக் கண்ணாடி!

'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற காளையை அடக்கும் இளைஞன் சின்னம் பொறித்த முத்திரையுடன், அன்றாடம் அதிர்வுகளை ஏற்படுத்தும் அரசியல் கருத்துக்களைக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கிறது, முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்தபிள்ளை 'முரசொலி'. தி.மு. கழகம் என்ற அரசியல் இயக்கத்தின் கொள்கைகளை, கோட்பாடுகளைத் தாங்கி வெளிவருகிற ஒரே நாளேடாக மட்டுமல்ல - அக்கொள்கைகளுக்கு விளக்கமளிக்கிற-விளக்கம் தருகிற - மறுப்புக்கு மறுப்புரைக்கிற மிகச் சிறந்த படைக்கலனாக திகழ்கிறது.

'மிசா' காலத்தில் முடக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தை பல்வேறு வகையில் முரசொலியின் துணைகொண்டு எதிர்கொண்டார் கலைஞர். சிலேடை தொனி கொண்ட தலைப்புகள் ஒருபுறமென்றால், புனைப்பெயர்களைக் கொண்டு, தன்னுடைய பதில்களைத் தொண்டர்களுக்கு வழங்குவது இன்னொரு பாணி. அந்த நேரத்தில், அவர் எழுதத் தொடங்கிய 'கரிகாலன் பதில்கள்' என்ற புதிய பகுதி பெரும் வரவேற்பைப் பெற்றது.

கரிகாலன் பதில்களுக்குச் சற்றும் சளைக்காத அரசியல் பத்தியாக கழகத்தின் 'கருத்துக் கருவூலம்' முரசொலி செல்வம் அவர்கள் 'சிலந்தி' என்ற பெயரில், எழுதிய கட்டுரைகளைக்




கொள்ளலாம். 2019–ஆம் ஆண்டு முதல் அவர் மறைந்த அக்டோபர் 10–ஆம் தேதி வரை வெளியான 151 'சிலந்தி' கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, நூலாக்கம் பெற்றுள்ளது.

இந்நூலை 'முரசொலி' செல்வம் அவர்களது பிறந்தநாளன்று கழகப் பொதுச்செயலாளர் வெளியிட, திராவிடர் கழகத்தலைவர் ஆசிரியர் அவர்கள் பெற்றுக் கொண்டார். கழகத் தலைவர் அவர்களின் அணிந்துரையோடு வெளியாகி இருக்கும் இந்நூல் காலத்தை, 'கழகத்தின் கண்ணாடி' கொண்டு காணும் கருத்துக் கருவூலமாக வெளியாகி இருக்கிறது. இந்நூலை கழக இளைஞர் அணியின் 'முத்தமிழறிஞர் பதிப்பகம்' வெளியிட்டுள்ளது.

ஆளுநரின் அடாவடித்தனங்களுக்கு ஆக்ரோஷமான பதில்களைத் தருவது, எதிர்க்கட்சிகளின் பொய்ப் பரப்புரைகளுக்கு ஆதாரம் நிரம்பிய பதிலை அள்ளித்தெளிப்பது, கழகத் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் ஆக்கபூர்வ ஆலோசனைகளை வழங்குவது, இயக்கத்தின் வரலாற்றை சம காலத்திற்கு ஏற்றாற்போல், அர்த்தப்படுத்துவது என பல்வேறு கொள்கை நிரம்பிய செயல்பாடுகளை ஆற்றி வந்தன 'சிலந்தி' கட்டுரைகள்.

'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா...' என்று ஆளுநர் ஆர்.எஸ். எஸ். ரவிக்கு சிலந்தி ஆற்றிய எதிர்வினைகள், உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு மேலும் பொருள்படுகின்றன. 'ஜோக்கர்' ஜெயக்குமார், 'கால்வேக்காடு' ஜெயக்குமார் என்று சிலந்தி சூட்டிய அடைமொழிகள் எவ்வளவு மெய் என காலம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப் பல கட்டுரைகள் தி.மு.கழகத்தின் நிலைப்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் உரம் சேர்க்கும் ஒன்றாக இருந்துள்ளதை இன்றைக்குப் படிக்கும்போது உணரமுடிகிறது.

கழகத்தின் மீதும், கழகத் தலைவர் மீதும் அவதூறும், பழிச் சொற்களும், இழி மொழிகளும் வீசப்பட்டபோது நெஞ்சுரத்துடன் இரும்பின் உறுதியுடன் கொள்கை வலைகளைப் பின்னி கழகத்தின் மாண்பைக் காத்த 'சிலந்தியின் கட்டுரைகள்' கொள்கை வகுப்பெடுக்கும் கட்டுரைகளாக காலத்திற்கும் நிலைத்திருக்கும்.

...வாசிப்போம்.

## மலரும் நினைவு

### `ஸ்ரீ', `திரு' வாக மாற போராட்டம்!

1942–ஆம் ஆண்டு மார்ச் 10–ஆம் தேதி, தமிழில் 'திரு' என்ற வார்த்தையை மரியாதை நிமித்தமாக 'ஸ்ரீ' என்று அழைப்பதற்கு மாற்றாக உபயோகப்படுத்த வேண்டும் என்கிற ஒரு அறிக்கையை வெளியிட்டார் பெரியார். அது தொடர்பாக பொதுமக்கள் கருத்து தெரிவிக்க வேண்டும் என அரசு கேட்டுக் கொண்டதால், பெரியாரின் அறிக்கை தமிழ்நாடு முழுவதும் எதிரொலித்தது. இதற்கு ஆதரவாக பல்வேறு அமைப்புகள் தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைத்தன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131